Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஸ்ரீ (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10]

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] பார்ப்பானம்:- சார்வரி௵ சித்திரை ௴ ௩௰ வெள்ளிக்கிழமை (13 MAY. 1960) [இல-௬]

அரசியல் அலை

# போலிப் பிரசாரத்தாற் பொதுத் தேர்தற் சூழ்ச்சிகள்!

## கட்டுக்கதைகள் முட்டுக்கடங்கா

——————:0:——————

அவர் கட்சி மாறிவிட்டார். முன் எந்தக் கட்சியைத் தூற்றினாரோ அந்தக் கட்சி அபேட்சகராக இப்பொழுது முன்வருகின்றார் என்று முதலாம்நாள் வெளிவரும் ஒருசெய்தி. அடுத்த இதழில் எடுத்துப் பார்த்தால் அவரின் பெயர் குறிப்பிட்ட கட்சியின் இடாப்பில் இருக்கமாட்டாது. போலிப் பிரசாரத்தின் போக்கில் இது ஒருவகை!

கூடஇருந்து கூட்டங் கூடினவர்களுக்கும் எட்டாத இரகசியங்கள் செய்திகளாக வெளிவருகின்றன. ஒரு தொகுதியில் ஒரு அபேட்சகர் பாராளுமன்றங் கலைக்கப்பட்ட அன்றே தான் முன் வருவதாக முடிவு செய்து விட்டார். அத்தொகுதியி லுள்ளவர்களுக்கும் ஏனையோருக்கும் இந்த உண்மை தெரியும் ஆனால் வதந்தியின்படி. அத்தொகுதிக்குப் போட்டியிட யாரும் முன் வரவில்லை. இது இன்னொருவிதம்.

வெள்ளிடை மலைபோல இந்தத் தொகுதிக்கு இவர் தான் அபேட்சகர் என்று சொல்லக்கூடிய தொகுதிகள் பல. காரணம், முன்னிருந்த அங்கத்தவர்களை மாற்றுவதில்லை என்பது மட்டுமன்று, முடியுமானால் எதிர்ப்பின்றி அனுப்புதல் வேண்டுமென்பது ஆதரவாளர்கள் கொள்கை இருந்தும் சிலஇடங்களுக்கு அபேட்சகர்கள் நியமனஞ் செய்யப்படவில்லை என்று செய்தி. இது வேறொரு விதம். மனக்கோட்டை கட்டுதல், விரும்பியவிதம் பேசுதல், ஒன்றை இன்னொன்றாகச்சொல்லுதல் பொதுத் தேர்தலுக்கு முன் நிகழ்தல் வேண்டுமா? அபேட்சகர்கள் முன்வருவார்கள்; ஆயிரம் ஆயிரம் ஆக வந்தாலும் வாக்காளர்கள் அறிவு நிறைந்தவர்கள், அனுபவமுள்ளவர்கள்; முன் பன்முறை வாக்களித்தவர்கள். அவர்கள் தங்கள் தீர்ப்பைக் கூறுவார்கள்தானே.

சிறிமாவோவும் இடட்லியும் ஒருவர்க்கொருவர் போட்டியிடுவார்கள் என்ற செய்தி உருசிகரமானது. ஆனால் உண்மையானதா? மகாதேசாதிபதி ஒருபொழுதும் பாராளுமன்றத்தைக் கலைக்கமாட்டார் என்று பலத்த வதந்தி அடிபட்டது. பலர் உண்மையாகக் கருதினர். ஈற்றில் வதந்தி வதந்தியாய் இருந்தது. இவ்வாறு கட்டுக் கதைகளாலே தேர்தற் பிரசாரம் ஒவ்வொரு முறையிலே நடைபெறுகின்றது.

——

## வட்டுக்கோட்டைக் கிராமச்சங்கத் தலைவர்

வெள்ளிக்கிழமை 6-5-60ல் நடைபெற்ற வட்டுக்கோட்டைக் கிராமச்சங்கத்தலைவர் தேர்தலில் அராலி தெற்கு வாசியும், அராலி சரஸ்வதி வித்தியாசாலை ஆசிரியரும், கிராமச்சங்க அங்கத்தவருமான திரு வே. ஐயாத்துரை அவர்கள் தலைவராகத்தெரிவு செய்யப்பெற்றுள்ளார்.

## மாணிக்கவாசகர் அழுத அழுகை

திருவாசகத்தைப் பக்தியோடு படித்து அதன் பொருட்சுவையை அனுபவித்தால் வாழ்க்கையில் சமாதானம் ஏற்படும்

மாணிக்கவாசகர் இரண்டு முறை இரண்டு வகையாக அழுதார். இவ்வளவு காலமும் தான் இறைவனைச் சந்திக்கவில்லையே என்று ஒரு முறை வெந்து அழுதார். பின், இறைவனின் காட்சி கிடைத்ததே என்று ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்.

"திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்பது பழமொழி. இந்தக் கூற்றின் உண்மையை திருவாசகத்தைப் படிப்பவர் ஒவ்வொருவரும் உணரலாம்!

நாம் ஒரு பொருளின்மீது அன்பு வைத்துவிட்டால் அதற்கு நம்முடைய பொருளைச் செலவு செய்கிறோம். இந்த நிலை உள்ளத்தில் ஏற்பட்டு விட்டால் நாமும் அன்பு செலுத்திய பொருளும் ஒன்றாக மாறிவிடுகின்றன. இந்த நிலை ஏற்பட்டுத்தான் மாணிக்கவாசகர் இறைவனின்மீது திருவாசகம் என்னும் தேனைச் சொரிந்தார்.

இறைவன் முன்னே மாணிக்கவாசகர் தன்னைத் தாழ்ந்த நிலையிலும் இறைவனை உயர்ந்த நிலையிலும் வைத்துப் பாடினார்.

இந்த உலகமோ பொய். சிவானந்தம் 'மாத்திரந்தான் நித்தியம் என்ற உண்மையை உணர்ந்துதான் இப்படி உருக்கமாகப் பாடினார் மாணிக்கவாசகர்.

திருக்கோணமலை சைவாபிவிருத்திச்சங்க ஆதரவில் திருவாசகமும் மணிவாசகரும் என்னும் பொருளில் ஸ்ரீமத். கி வா. ஜகந்நாதனவர்கள் [illegible] கண்டவாறு கூறினார்கள்.

## நற்சிந்தனை

தருமமு மில்லைத்  
தானமு மில்லைக்  
கருமமு மில்லைக்  
கண்டுகொண் டேனே.

மண்டல முழுதும்  
மன்னிய பொருளைக்  
கண்டுகொண் டேனே  
கவலைதீர்ந் தேனே.

அண்டமும் பிண்டமு  
மடங்கலு மதுவே  
தொண்டர்கள் கண்டு  
துயர்தீர்ந் தாரே.

(சிவ தொண்டன்)

## சோமநாதர் ஆலயத் திருப்பணி

—:—

சௌராஷ்டிர தேசத்தில் வீரவால் என்ற புகையிரத நிலையத்திலிருந்து சோமநாதரின் ஆலயமுள்ள இடமாகிய பிரபாஸ பட்டினம் 3மைல் தொலைவிலுள்ளது. வைடூரிய மணிபர்வதம் என்னும் குன்றின்மேல் சோமநாதர் ஆலயம் உள்ளது; இங்கிருந்து துவாரகை 300 மைல். கஜினிமுகமது இங்கே பலதடவை படை எடுத்துவந்து இலிங்கத்தை உடைத்து அதிலிருந்து உதிர்ந்த நவரத்தினங்களை அள்ளிச் சென்றிருக்கின்றான்.

மேற்படி சோமநாதர் ஆலயத்தைத் திருப்பணிகள் செய்ய வேண்டி காலஞ்சென்ற வல்லபாய் பட்டேல் (இந்திய அரசாங்கத்தில் உள்நாட்டு அமைச்சராக இருந்தவர்) அவர்கள் ஒரு சபையை நிறுவி அச்சபையின் மேற்பார்வையில் ஒரு கோடி ரூபாய் செலவில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

தவப்பெருந்திரு. கயிலை குருமகா சந்நிதானம் அவர்கள் சோமநாதர் தரிசனம் செய்து கொண்டு திருப்பணிக்காகப் பொருள் உதவியும் வழங்கியுள்ளார்கள்,

(திரு. மா. பா. தினமணிநிருபர்)

# மெய்யுணர்வைத்தரும் ஒப்பற்ற பெரும் நூல்

——————:0:——————

## உலகப் பேரறிஞர்களால் ஏற்கப்பெறும் பெருமைவாய்ந்தது

———:o:———

சரவணை "சேவா மன்ற" ஆதரவில் சரவணை 'நாகேசுவரி' வித்தியாசாலையில் 4-5-60ல் நடைபெற்ற இலக்கிய விழாவில் பேராசிரியர் திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் "திருக்குறளும் சைவசித்தாந்தமும்" என்னும் பொருளில் ஆற்றிய சொற்பெருக்கின் சுருக்கம்.

திருக்குறளானது சிவநெறிவழியே நின்று எழுதப்பட்ட ஒரு சிறந்தநூல்—பொதுநூல். உலகப் பேராசிரியர்கள் எல்லோரும் திருக்குறளை நன்கு ஆராய்ந்து நயம்பல பெற்றுள்ளார்கள். ஆகவே நாம் எல்லோரும் திருக்குறளின் பயனை நன்கறிந்து அதன் வழிநின்று ஒழுகவேண்டும்.

இந்தியாவில் உள்ள மயிலாப்பூரிலே திருவள்ளுவநாயனாரது திருவுருவச் சிலை ஒன்றை அமைத்து, அதற்குப் பூசைகள் செய்து வழிபடுகிறார்கள், அதே போன்று வேறு எங்கேயாவது திருவுருவம் அமைத்துள்ளார்களா? இல்லை. திருவள்ளுவரை வழிபடுகின்றார்களா என்றால் அதுவுமில்லை. திருவள்ளுவர் தான் ஒரு சைவர் என்றோ அல்லது வேறு ஒரு சமயத்தவர் என்றோ சொல்லவில்லை. திருவள்ளுவ நாயனாரைச் சைவர், வைஷ்ணவர், ஆருகதர், பௌத்தர், கிறீஸ்தவர் முதலிய சமயத்தவர்கள் பலரும் தத்தம் சமயத்தவர் என்று கூறுகிறார்கள். உண்மையை நிரூபித்தவர்கள் எவருமில்லை திருக்குறள் தொன்மையானது. உயர்ந்த ஆழ்ந்த கருத்துக்களை — அடிப்படையான கருத்துக்களையுடையது.

திருக்குறளானது அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களையுடையது. அறப்பாலை முன்னதாக எழுதியுள்ளார். அந்த அறத்துப் பாலில் முதலாவதாக எல்லாவற்றுக்கும் முதலான கடவுளைப்பற்றிக் கூறுகின்றார். இம் முப்பாலில் நான்காவது பாலாகிய வீடும் அடங்கும்.

அறத்தால் வருவதே செல்வம், இன்பம். அறத்துப்பாலிலே இல்லறம், துறவறம் என இருபெரும் பிரிவுகள் உண்டு. அருட்செல்வமே துறவறத்துக்குத் தலையாய செல்வம். அச் செல்வத்தையுடையவர்களே துறவுக்கு ஏற்றவர்கள்.

'கொல்லான்புலாலைமறுத்தானைக் கைகூப்பி  
எல்லா உயிரும் தொழும்'.

என்றமையால் எல்லோரும் கொல்லாமையை மேற்கொண்டு ஒழுகவேண்டும். கொலை, புலால் உண்ணல், நிறையாமை, பற்றுச் செய்தல் போன்ற அவாக்களை ஒழித்து விடக்கூடியவனே துறவறத்தைமேற்கொள்ள வேண்டும். எல்லாப் பொருள்களுக்கும் அறங்களுக்கும் மூல காரணமாய் இருப்பவர் கடவுளே.

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி  
பகவன் முதற்றே யுலகு'

என்பதனால் அகரம் போன்று கடவுளானவர் எல்லாப் பொருள்களுக்கும் முதல்வராய் உள்ளார் என்பது தெளிவுபடுத்தப் பட்டது.

'நெருப்பின்றிப் புகையில்லை, புகையின்றி நெருப்பில்லை' என்ற சித்தாந்த உண்மையைக் கொண்டே அநுமானத்தால் கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்று கூறிவிடலாம். உயிர்எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து எப்படி ஒன்றுசேர்ந்து உயிர்மெய்யானதோ அதேபோன்று கடவுளும் நமக்குள்ளே இரண்டறக் கலந்து இருக்கின்றார் என்பதைக் (இக் குறளிற்) காணலாம். உயிர்மெய் எழுத்துகளுக்குள்ளே அகரமானது தோன்றாமல் தோன்றியிருப்பது கண், கூடு'. சிவமும், திருவருளும், மலமும், திரோதான சக்தியும், ஆன்மாவும் பிரணவப் பொருளிலே தங்கியிருக்

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்
சார்வரி ஞு சித்திரை மீ ௩௧ உ வெள்ளிக்கிழமை

## தேசசேவை ஆகட்டும்!

மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் வந்துவிட்டது. கட்சி ஆட்சி முறையிலே இவ்வாறு அடிக்கடி தேர்தல் நிகழவேண்டிய நிலைமை உண்டாகும் விபரீதம் பிரான்சு தேசத்தை விட வேறு நாடுகளிற் காண்பதரிது. பொதுத் தேர்தலின்பொழுது மக்கள் நன்கு ஆராய்ந்து ஆட்சி அமைக்கக்கூடிய ஒரு கட்சிக்கு ஆதரவு அளிப்பார்கள். இல்லையேல் ஒரே மனப்பான்மையுடைய ஆனால் முக்கியமல்லாத வேற்றுமையான சிலநோக்கங்களையுடைய இரண்டு மூன்று கட்சிகள் வாக்காளர்களின் தயவைப்பெறும். எந்த நிலைமையிலும் நாட்டின் நலங்கருதியே மக்கள் நடந்துகொள்வார்கள்.

ஆடி இருபதில் நிகழவிருக்கும் பொதுத்தேர்தல் மக்களுக்கு மேலதிகமான பொறுப்பைச் சுமத்தியிருக்கின்றது பங்குனி பத்தொன்பதிலே மக்கள் தீர்ப்பு, ஆட்சி அமைப்பதற்கு எந்த ஒரு கட்சிக்கும் ஆற்றல் கொடுக்காதபடியால் கட்சிகளின் கொள்கைகளை மீண்டும் ஆராய்ந்துபார்த்து வாக்களிக்குமாறு மக்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

மக்களுக்கு உள்ளதை உள்ளவாறெடுத்துக்கூறி அரசியற்கொள்கை நுணுக்கங்களைத் தெளிவாக விளக்கிக் கட்சிப்பிரசாரம் நிகழ்த்தப்பெறவேண்டும். கட்சிக் கொள்கை விளக்கம், தேசசேவை என்கின்ற அடிப்படையிலிருக்குமேயானால் உண்மையாகத் தேர்தல் முடிபுகள் நாட்டின் நன்மைக்கு வழிகாட்டும். தமிழகத்தின் வருங்காலம் மக்கள் கையிலேயே இருக்கின்றது. இங்கு முக்கியமான வேறுபாடுடைய மூன்று கட்சிகளே வாக்காளர்களின் ஆதரவைநாடிநிற்கின்றன. இணைப்பு ஆட்சித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு சாராரும் ஒற்றை ஆட்சி முறையைத் தழுவி இன்னொரு சாராரும் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்காக வாதாடுகின்றனர். மூன்றாவது கட்சி பொருளாதார நெறியை அடிப்படையாகக் கொண்டு ஒற்றை ஆட்சி அமைப்பில் இன ஒற்றுமை மூலம் தமிழ்பேசும் மக்களுக்கு நீதி வழங்குதல்வேண்டும் என்ற பான்மையில் இயங்குவது. எனவே இம்மூன்று கொள்கைகளைப் பொதுமக்கள் நன்கு விளங்கக் கூடிய முறையிலே எடுத்துக்காட்டி அவற்றைச் செய்கையிற் பெறுவதற்குரிய வேலைத் திட்டத்தை வகுத்துக் கூறி மக்கள் ஆடி இருபதாம் நாளில் உண்மையை உணர்ந்தவர்களாய்த் தமிழகத்துக்கு எந்தக் கொள்கை நன்மைபயக்கும்பான்மையதென்பதை அறிந்தவர்களாய் வாக்களிப்பதற்குக் கட்சிகள் உ[illegible] அத்தியாவசியம்.

# மந்திர வடிவத்திற் செய்யும் சிவ வழிபாடு

## சைவ மக்கள் சிரத்தையுடன் செய்யவேண்டிய ஒன்று

சைவப்பெரியார் ஆறுமுகநாவலரவர்கள் பிரசங்கம் செய்த அதே இடத்தில் நான் நின்று சிவ வழிபாட்டைப்பற்றிப் பிரசங்கம் செய்யத் திருவருள் கூட்டி வைத்துள்ளது. இப்போது நாமெல்லாம் முப்பத்தைந்து தத்துவங்களுள் கீழேயுள்ள தத்துவத்திலேதான் தொழிற்படுகின்றோம். சிவபிரான் சோதிமயமாக இருக்கின்றார் இதை விளக்க பிரமவிஷ்ணுக்கள் தாமே உலகத்தில் மேலானவர்களென்று தருக்குற்றுச் சமர்செய்த காலத்தில் சிவபிரான் அவர்கள் மத்தியில் அனற் பிழம்பாய்த் தோன்றினர். அதைக்கண்ட பிரமா விஷ்ணுக்கள் அவ்வனற் பிழம்பின் எல்லையைக் காண்பவரே மேலானவரென்று தம்முள் ஓர் ஏற்பாடுசெய்து தானென்றதன் முனைப்பினாலே மிகக்கீழான பிறவியான பறவையாகியும், பன்றியாகியும் அடிமுடி தேடிக் காண இயலாது களைப்புற்று நின்ற நிலையிலே சிவபெருமான் லிங்கோற்பவராக அவர்களுக்கு அறிவுறுத்தினர். முதல் சோதிப் பிளம்பாக நின்ற அவதரம்மாறி லிங்க மயமாகக் காட்சியளித்தார். ஒவ்வொருவருள்ளத்திலும் சோதிமயமான காட்சியாயுள்ள பரம்பொருளே வெளியே சுடர்மயமான லிங்கமாக அடியார் செய்யும் பூசையை ஏற்றனுக்கிரகிக்கிறார். ஓரரசனின் குழந்தை தன்பிதாவின் மடியிலேறவேண்டுமென்று அவாவினால் அரசனே குனிந்து அக்குழந்தையை எடுத்து தன் மடியில் வைப்பதுபோல் கீழ்த் தத்துவங்களிலேயுள்ள ஆன்மாவைச் சிவபெருமானே தன் அருளினாலே — ஐந்தொழிற் கிரமத்தினாலே - சுத்தமாயா தத்துவத்தில்நின்று அனுக்கிரகம் செய்கின்றார். லிங்கமென்ற சொல், லி என்ற லயத்தையும், க என்ற தன் மாட்டிழுத்தல் என்ற தொழிலையும் காட்டுவதாயும் உள்ளது. கோயிலிலே பூசை செய்வதென்றால் கீழ்த் தத்துவமெல்லாவற்றையும் விட்டு சுத்தமாயா தத்துவத்திலே ஈசனை மந்திர வடிவத்திலே பிரார்த்தனை செய்வதாகும். அந்த நிலையிலே வேறு சிந்தனைகளின்றிச் சிவ சிந்தனையொன்றே மேம்பட்டு நிற்கும் பிரம விஷ்ணுக்கள் சிவபிரானை அர்ச்சிக்கும்பொழுது விஷ்ணு கிழக்கு நோக்கிய முகத்திலும் பிரமா மேற்கு நோக்கிய முகத்திலும் அர்ச்சித்தார்கள். வாமதேவகுக்யாயநம வென்று வாமமுகத்திற் செய்யும் பிரார்த்தனை அறம் பொருள் இன்பத்தைக் கொடுக்கின்றது. அகோர கிருதயாயநம என்று வித்தியா தத்துவத்திலே செய்யும் பிரார்த்தனையால் உண்மை ஞானனுக்கிரகம் கிடைக்கும். எல்லோரும் சிவலிங்க வழிபாடு செய்தல் வேண்டும். சிவபூசை செய்கிறவர்கள் தம் உடல் குன்றும் வரையிலும் சிவபூசை செய்தல்லாமல் யாதொன்றையும் அருந்த மாட்டோம் என்ற விரதபரராயிருப்பார்கள்.

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் சித்திரைப் பூரணைத் திருநாளில் ஸ்ரீமத் கவச்சிரவேலு முதலியாரவர்கள் சிவலிங்க வழிபாடு என்னும் பொருளிற் செய்த சொற்பொழிவின் போது மேற்கண்டவாறு கூறினர்.

## மங்காப் புகழ் ஈட்டிய பெரியார்

### ஆனந்தக்குமாரசுவாமியை நினைத்து அவர் சென்ற வழியிற் செல்லுங்கள்

தமிழகத்துக்கு அருந்தொண்டாற்றிய திருவாளர் மு. ஆநந்தக் குமாரசுவாமியை அறியாதார் இருப்பார்களா? அன்னார் 1877-ம் ஆண்டு ஆவணி (ஒகஸ்டு) மாதம் 22ந் திகதி கொழும்புமாநகரில் உதயமானார். அவருடைய இரண்டாம் வயசில் தந்தையாராகிய முத்துக்குமாரசுவாமி பரகதியடைந்தார். அதன்பின் அவர் தாயாரின் பாதுகாப்பில் வளர்ந்தார்.

தாயின் உதவியால் நிலநூலில் பி. எஸ்ஸி. (B Sc.) பட்டம் பெற்று ஈடில்லாப் புகழை ஈட்டினர், அதன்பின் பல அறிஞர்களை அடைந்து தமது அறிவை வளம்படுத்தினர்.

ஆனந்தக்குமாரசுவாமியின் கீர்த்தியை அறிந்த இலங்கை அரசாங்கத்தினர் 1903-ம் ஆண்டு அவரை உலோக பரிபாலனப்பகுதி (Minerological Survey த் தலைவராக நியமித்தனர். அவரின் முன் மாதிரியைக்கண்ட இலண்டன் சர்வகலாசாலையினர் அவருக்கு டி.எஸ்சி. (D.Sc.)ப் பட்டத்தை வழங்கினர்கள்.

அவர் உத்தியோக முறையில் இருக்கும்பொழுது ஆங்காங்கு புதையுண்டு கிடந்த கலைச் செல்வங்களைக்கண்டு அவற்றிலுண்டான பற்றுக் காரணமாக உத்தியோகத்தை விட்டு ஆராய்ச்சியில் ஈடுபட ஆரம்பித்தார். அதன்பின் இங்கிலாந்து சென்று 'இடைக்காலச் சிங்களக் கலைகள்' (Mediaval Singhalese Art) என்னும் நூலை எழுதி வெளியிட்டார். 'இந்திய சிற்பி' (Indian Craftsman) என்ற நூலையும் எழுதி வெளியிட்டார். இவற்றின் பயனாய் அவருடைய புகழ் உலகம் முற்றிலும் பரவலாயிற்று.

அவர் 1919-ம் ஆண்டு போஸ்டன் (Boston) நகரத்தில் கிழக்குத்தேசப் பொருட்காட்சிப் பகுதித் தலைவராக நியமனம்பெற்றார். அன்னார் அவ்வேலையில் கண்ணும் கருத்துமாய் இருந்து அரிய ஆராய்ச்சிகளைச் செய்து பல புத்தகங்களை வெளியிட்டார். அன்னாரின் புத்தகங்கள் யாவும் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டன.

இவ்வாறு சிறந்த ஆராய்ச்சிகளின்மூலம் செயற்கரிய பல சேவைகளைச் செய்து தமக்கும் தம் இனத்துக்கும் மங்காப் புகழ் ஈட்டிய இப்பெரியார் 1947-ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இவரை நினைவு கூர்ந்து இவர் சென்ற பெருநெறியிற் செல்ல முயலுதல் தமிழ் மக்களின் கடனாகும்.

திரு. இ. நா. தியாகராசா,
சரவணை.

## மகாசந்நிதானத்தின் தலயாத்திரை

கொள்ளிடம் ஏப் 12

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-வது பட்டம் குருமகாசந்நிதானம் தவப்பெருந்திரு கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், பன்னிரண்டு ஜோதிர்லிங்கஸ்தலயாத்திரைக்குச் சென்று 14-3-60 அன்று விருத்தாசலம் யாத்திரையை முடித்துக்கொண்டு சோமநாதம், ஸ்ரீ சைலம், மகாகாளம், ஓங்காரம், வைத்தியநாதம், பீமசங்காரம், நாகேசம், திரியம்பகம், குஸ்மேசுவரம் ஆகிய 9 க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்று 9 ஜோதிர் லிங்கப் பெருமான்களுக்கும் விசேஷ அபிஷேகம் அலங்காரம், ஆராதனைகள் செய்து வழிபாடு செய்துகொண்டு சென்ற வெள்ளிக்கிழமை ஆதீனத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

## துப்பறியும் சுப்புமாமா




### தேர்தல் போகம் மாறிவந்துவிட்டது

மாரியில் மழை கோடையில் வெய்யில் என்று பழகிவந்த சுப்புமாமா தேர்தல் முடிந்ததும் இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குத் துப்பறியும் வேலை இல்லையே என்று நம்பி ஓய்வெடுத்துத் தேர்தலில் விளைந்த மனப்புண்ணையும் உடற்புண்ணையும் மாற்றிக் கொண்டு வரும் வேளையிலே போகம்மாறித் தேர்தற் காற்று வீசத் தொடங்கியது. அவ்வளவுதான் மறுபடி மாமாவும் காற்றோடு வந்துவிட்டார்.

பழையபடி தொழிலில் இறங்கிய மாமா கட்டுக்காசு திரட்டும் கூட்டத்திலே தான் முதன்முதல் சிக்கினர். விஷயத்தை விசாரித்தார். ஆழ்ந்து யோசித்தார். பின்பு காசு திரட்டும் தொண்டர்களைப் பார்த்து, "மக்களே, என்னை அறியாமலே எனக்குக் கட்டுக்காசு சேர்க்கத் தொடங்கிவிட்டீர்கள். தேர்தலிலே இடுபட முடியாத வகையிலே உடம்புங் கெட்டு உள்ள [illegible] என்னை இன்னுமொரு முறை இந்த அலங்கோலத்தை அனுபவிக்கச் சொல்கிறீர்களா? வெற்றி எடுக்க வேண்டுமென்றால் எனக்கு வழிதெரியும். ஆனால் இந்த மாதிரி இரண்டு கிழமைக்கு மட்டும் பாராளுமன்றத்தில் அங்கத்தவராயிருப்பதற்கு இத்தனை பாடு படவேண்டுமா? சங்கக்கடை ஆண்டுக்கூட்டங்கள் நாலு ஐந்து ஆண்டுக்கொருமுறை நடக்கலாம் பாராளுமன்றம் நினைத்தவுடன் கூடுவது நினைத்தவுடன் குலைவதுமா? என்று ஆரவாரஞ் செய்தார் சுப்புமாமா.

சற்றுக்கோபம் தீர்ந்தபின் சேர்க்கப்பட்ட கட்டுக்காசை வேண்டுமென்றால் ஏற்றுக்கொள்கின்றேன், ஆனால் இதுதான் கடைசி முறை என்று கூறிமுடித்தார் மாமா.

பணம் திரட்டும் அன்பர்கள் மறுபடி சந்திப்பதாகச் சொல்லி மறைந்தனர். மாமாவும் மனக்கோட்டையைக் கட்டிக்கொண்டு வீடு சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவச் சிறப்பறிதற்குக் கற்கவேண்டிய நூல்கள்

## அநாதர் விடுதி ஒன்றின் அவசிய தேவை

—:0:—

[அகில இலங்கைச் சைவமகாநாட்டில் சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனமவர்கள்நிகழ்த்தியவரவேற்புரை

(முற்றொடர் - 2)

சைவமக்கள் கற்கவேண்டிய நூல்கள் யாவையென அறிவுறுத்தவும் இத்தகைய சைவ மகாநாடு அவசியம் வேண்டப்படும்.

"முந்தொரு காலத்தின்
மூவுலகந் தன்னில்
வந்திடு முயிர்செய்த
வல்வினை யதனாலே
யந்தமின் மறையெல்லா
மடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந்
தேவரு மருளுற்றார்."

இக்கந்தபுராணத் திருவிருத்தத்தின் கருத்து இக்காலத்தில் யாவராலும் கூர்ந்து சிந்திக்கற்பாலது. சைவசமய உண்மைகளை அறிவதற்குச் சைவமக்கள் எவற்றைக் கற்க வேண்டுமென அறியாமலிருக்கின்றார்கள். கற்கக்கூடாத நூல்களைக் கற்றுவிட்டு அந்நூல்கள் வாயிலாகக் கற்ற நூல்களையே சைவசமய உண்மைகளென மயக்கங்கொண்டிருக்கிறார்கள். கற்கக்கூடாத நூல்களைக் கற்பது நெற்குத்தியுண்ணுது உமிகுத்திக் கைவருந்துதற்கும் மலடு கறந்து ளளந் தளர்தற்கும் சமானமாகும்.

சிவனுடைய பெருமையினையும் பசுக்களாகிய எங்கள் இயல்புகளையும் சிவபெருமான் எங்களுக்கு அருளைப்புரிகின்ற முறையினையும் அறிதற்குச் சிவபுராணங்கள் சிறந்த சாதனங்களாகும். பன்னெடுங் காலமாகச் சிவபுராண படனம் நமது நாட்டில் நடைபெற்று வந்தது ஆண்கள், பெண்கள் யாவரும் சிவபுராண படனங்களைக் கிரமமாகக் கேட்டு மூவகைத் தமிழையும் சைவசமயக் கருத்துக்களையும் ஒழுக்கங்களையும் கற்றுணர்ந்து நற்கதியடைந்தார்கள். இக்காலத்தில் இச்சிவபுராணபடனம் நமது நாட்டில் அருகி வருகின்றது. இச்சிறந்த பணி நாட்டில் விருத்தியடையச் செய்தற்கு எங்கள் சபை வேண்டிய முயற்சி செய்ய வேண்டும். வேதம் ஆகமமாகிய சைவசமய முதல் நூல்களில் ஆழ்ந்த கருத்துக்களைப்பூதக்கண்ணாடி போல் விரிவுபடுத்திக் கூறுவது புராணங்களாகும். புராணம் என்ற சொல்லுக்குப் பொருள் பழங்கதை. கதைகள்மூலம் அறங்களையும் உண்மைகளையும் நன்கறியலாம்.

இந்தச் சைவ மகாநாட்டில் குழுமியுள்ள சைவ மக்கள் சிந்திக்க வேண்டிய தொன்றுண்டு. சின தினங்களுக்கு முன் ஒரு நண்பர் நம்மிடம் வந்து ஒரு சன்னியாசி நோய் வாய்ப்பட்டிருக்கின்றார். அவருக்குச் சிகிச்சைகள் செய்து அவரைப் பேணுதற்கு ஓர் இடமில்லை. அச்சன்னியாசியார் ரிஷிகேசத்திலுள்ள சிறந்த அனுபூதிமானாகிய சுவாமி சிவானந்தருடைய சீடன். எட்டு வருடம் வரையில் ரிஷிகேசத்தில் அவருடைய மடத்தில் வசித்துத் தவவாழ்க்கை நடத்தியவர். குறித்த சன்னியாசியாரை வைத்துப் பேணுதற்கு இடமும் உதவியுமில்லாமையினால் அவருக்குச் சிலர் கத்தோலிக்க வயோதிபசாலையில் சேரும்படி புத்திகூறுகின்றார்கள். அங்கே போய்ச் சேருவதாக விருந்தால் அவர் ஞானஸ்நானம் பெற்று கத்தோலிக்க மதத்தை அநுட்டிக்க வேண்டும். அவர் அதனை விரும்பவில்லை. அவருக்கு உங்கள் சபையால் உதவி செய்ய முடியுமோ? என்று பரிதாபமாகக் கேட்டார். இற்றைக்கு 15 ஆண்டுகளுக்கு முன்பு சண்டிருப்பாய் என்னும் கிராமத்தில் ஒரு கொடியவன் ஓர் இளம்பெண்ணைத் தன்னை மணம் செய்யும்படி கேட்டதும், அவள் மறுத்தபொழுது அவன் அப்பெண்ணின் கைகள் இரண்டினையும் முழங்கைகளுக்கு மேல் வெட்டியதும் இங்கு பலருக்குத் தெரியும், அப்பெண் பேருக்குச் சொந்தமாக ரூபா 5000 வரையில் உரிமைப் பணம் கோட்டில் கட்டப்பட்டிருந்தது, அப்பணத்தையும் பெற்றுக்கொண்டு அப்பெண்ணை வைத்துப் பாதுகாக்கும்படி அக்காலத்தில் சிலர் சைவச் சங்கங்களையும் மடங்களையும் போய்க் கேட்டார்கள், வாய்க்கவில்லை. கடைசிபாக அப்பெண் ஒரு கத்தோலிக்க மடத்தைச் சரணைச் சென்றடைந்தாள். மலாயாவிலுள்ள நண்பரொருவர் அப்பெண்ணுக்குக் கொடுக்கும்படியாக 11 வருடங்களுக்கு முன் நமக்கு ரூபா 60 அனுப்பியிருந்தார். வலிகாமம் மேற்கு மணியகாரனிடம் அப்பெண் இருந்த மடத்தையறிந்து அவரும் நானுமாகச் சென்று அப்பிள்ளையிடம் அந்தப் பணத்தைக் கொடுத்தோம். அப்பெண்பிள்ளை மாத்திரமல்ல அப்பிள்ளையினுடைய இளைய சகோதரிமார் மூவ..ம் மதம் மாறி அம்மடத்தைச் சேர்ந்ததையும் அப்பொழுதறிந்தோம். மேலே காட்டிய சன்னியாசியாரையும் பெண்பிள்ளையையும் போன்ற அனாதைகளைப் பாதுகாக்க ஓர் இல்லம் அவசியம் தேவை. இதனையும் எங்கள் சைவ மகாநாட்டில நீங்கள் சிந்திக்க வேண்டும். நமது வரவேற்புரையை நீடிக்க விரும்பவில்லை. இன்னும் ஒரு விஷயம் கூறிப் பூர்த்தி செய்கிறேன்.

இக்காலம் கொந்தளிப்பான காலம். மக்கள் மனதில் சமாதானம், திருப்தி முதலியவற்றைக் காண்பதரிது. சுதந்திரம் அடைந்துவிட்டோம் எனப் பெரும் மகிழ்ச்சியடைந்திருந்தோம். ஆனால் அம்மகிழ்ச்சி பெரும் ஏமாற்றமாய் முடிந்துவிட்டது அதற்குரிய காரணங்களையோ அல்லது பரிகாரங்களையோ இங்கு கூற நான் முன்வரவில்லை. உண்மையான சுதந்திரம் யாது என்பதைப் பட்டினத்தடிகள் தமது அருமைத் திருப்பாடல் ஒன்றில் விளக்குகின்றார்.

தாயும்பகை கொண்டபெண்டிர்
பெரும்பகை தன்னுடைய
சேயும்பகை யுறவோரும்பகை
யிச்சகமும் பகை
யாயும்பொழுதி லருஞ்செல்வ
நீங்கிலிங் காதலினாற்
றோயுநெஞ்சே மருதீசர்பொற்
பாதஞ் சுதந்திரமே

பிரபஞ்சத்திலழுந்திக்கிடக்கும் மனதே, ஆராயுங்காலத்தில் அருமையான செல்வம் நம்மை விட்டு நீங்கிவிடில் அருமையாகப் பெற்றெடுத்த அன்னையும் பகையாவள், திருமணம் செய்து கொண்ட மனைவியும் பெரிய பகையாவள், தனது பிள்ளைகளும் பகையாவர், சுற்றத்தினரும் பகையாவர், இவ்வுலகத்தினரும் பகையாவர். ஆகையால் இவ்விடத்தில் திருவிடைமருதூர் பரமசிவனுடைய அழகிய திருவடியே நமக்குச் சுதந்திரமாகும்.

எங்கள் சைவமகாநாட்டு நிகழ்ச்சி நிரலில் காட்டிய வண்ணம் முதனாள் தலைமை வகிக்கவேண்டிய பெரியார் ஸ்ரீ க. வச்சிரவேலுமுதலியாரவர்கள் இன்று தலைமை வகிக்க வரமுடியாதெனவும், சனிக்கிழமை யன்றே சைவ மகாநாட்டில் பங்குபற்ற முடியுமெனவுந் தெரிவித்திருக்கின்றார். அவருக்குப் பதிலாக இன்றைய தினத்தில் சைவ மகாநாட்டில் தலைமைவகித்து தலைமைப் பேருரை நிகழ்த்தி சைவமகாநாட்டினை நடத்தும் வண்ணம் சென்னை 'கலைமக'ளாசிரியர் ஸ்ரீமத். கி. வா. ஜகந்நாதன் அவர்களைக் கேட்டுக்கொண்டோம், அவர்கள் எங்கள் விண்ணப்பத்துக்கிணங்கி வந்திருக்கின்றார் அவர் 19.6ம் ஆண்டில் எங்கள் சபை நடத்திய சைவ மகாநாட்டில் ஒரு தினத்தில் தலைமை வகித்துச் சொற்பொழிவாற்றியவர் அப்பெரியாரைப்பற்றி அறியாதார் தமிழுலகிலில்லை யென்றே கூறலாம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களைப்போன்று சைவத்துக்கும் தமிழுக்கும் சதாவுழைக்கின்றவர். அவர் முருகப்பெருமானுடைய சிறந்த பக்தன். நமக்கு எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் தமது தோத்திரமாக முருகப்பெருமான்மீது தாமாக யாத்த ஒரு செய்யுள் அமைத்திருக்கக் காணலாம். மகாமகோபாத்தியாய தாட்சிணாத்திய கலாநிதி உ. வே. சாமிநாதையரிடம் முறையாகத் தமிழ் கற்றவர். தருமபுரவாதீனம், திருவாவடுதுறையாதீனம், சென்னை யரசாங்கம் முதலிய உயர்ந்த தாபனங்களால் சன்மானிக்கப்பட்டவர். கலைமகள் ஆசிரியராகவிருந்து தமிழுலகுக்கு அவர் புரிந்து வரும் தொண்டு விலைமதிப்பில்லாதது தேவார திருவாசகங்கள் மற்றைய திருமுறைகள் தலவரலாறுகளைப்பற்றி அவர் எழுதிய நூல்களைப் படிப்பவருள்ளங்களில் பக்தியூற்றெடுக்கும். அவர்கள் இறைபணி புரியத் தூண்டப்படுவர். அத்தகைய பெரியாரையும் இங்கு குழுமியிருக்கின்ற பெரியார்களையும், தாய்மாரையும் பிள்ளைகளையும் எங்கள் சைவபரிபாலன சபையின் பேரால் தாழ்மையுடன் வரவேற்கின்றோம்.

சைவ மகாநாட்டு இரண்டாம் மூன்றும் நாட்களிலும் தலைமைவகிக்கவும், விரிவுரைகள் நிகழ்த்தவும் தமிழ்மறையோதவும் இசைந்துள்ள பெரியார்களை இச்சமயம்பணிவுடன் வரவேற்கின்றோம்.

திதில் ஐந்தெழுத்தும் நீறும்
கண்டிகையும்
சிவனடியாரும் வாழ்க"

—

## பழைய சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டது

=0=

உருத்திரபுரம் குளத்துக்குப் போகும் கல்வீதியொன்று திருத்தப்படும்படி மண் வெட்டப் பட்டபொழுது பௌத்த ஆலயத்தின் சின்னங்கள் சில காணவந்தன. அந்த இடத்துக்கணிமையில் புதிய ஆலயமொன்றமைத்தற்கு அத்திபாரமிடும் பொருட்டு மண் வெட்டப்பட்டபொழுது சிவலிங்கமொன்று காணவந்துளது, சில பழையகால நாணயங்களும் காணவந்துள்ளன. இவ்விடத்திற் பண்டைக் காலத்திற் சிவன் கோயிலொன்று இருந்ததென்பது இவற்றால் அறியவருகின்றது.

—

## ஆகமத்தைத் தழுவியது திருக்கோயில் வழிபாடு

### திருக்கோயில் வழிபாடு என்று நிலைபெற்றதோ அன்றே ஆகமாந்தம் நிலைபெற்றது

[பிரம்மஸ்ரீ. கு. பாலசுந்தரக்குருக்களவர்கள் "ஆகமங்கள் அறிவு நூல்கள்" என்னும் பொருள்பற்றி அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

(முற்றொடர் - 2)

வேதாகமங்களிலே கூறப்பட்ட உண்மைகளே திருமூலர் திருமந்திரத்தின் கண்ணே மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன திருமந்திரத்திலிருந்து நாம் சான்று பெறுவதற்கு முன்னர் திருமூலரைப்பற்றியும் அவர் தம் நூலைப்பற்றியும் ஒரு சிறிது ஆராய்வாம். திருமூலர் சரிதத்தை உற்று நோக்கின் அவர் கைலையிலிருந்து தெற்கு நோக்கி வந்தவராகத் தோற்றுகின்றார். கைலையாவது ஆகமாந்தப்பிறப்பிடமான "காஷ்மீரம்" எனப்படும் மலைநாட்டின் வடகிழ்த் திசையில் உள்ள ஒருபெரிய மலை. அந்நாடு "முதிர் பேரறிவு எனப் பொருள் பயக்கும் ஆகமாந்த முல்லைமலராகிய "பிரத்யபிஜ்ஞா தரிசனம்" என்னும் சமயம் முதன் முதன் பூத்தஇடம். சைவ சித்தாந்தம் என்னும் ஆகமாந்தம் வடமொழியிலுள்ள 28 திவ்யாகமங்களின் இறுதிக் கோட்பாடு. இவ்வாகமாந்தம் வடமொழியில் சிறப்புற்றோங்கிச் செழிக்கும் நான்மறைகளின் மெய்யுரை என்று சொல்லத்தக்கனவாகிய ஆகமங்களில் விரிவாயும் தெளிவாயும் கூறப்படினும், அது வேதங்களின் கடைப் பகுதிகளாகிய உபநிடதங்களிலும் இடைப் பகுதியாகிய பிராமணங்களிலும் முதற் பகுதியாகிய மந்திரங்களிலும் கூறுமற் கூறப்பட்டிருக்கும். அது எங்ஙனமெனில் மறையின் உட்பொருளே ஆகமாந்தமாம் ஆயின் மறையின் வெளிப் பொருளை நன்குணர்ந்து ஆராய்வோனுக்கு அவனது அறிவு முதிர்ச்சிக்குத் தக்கவாறு மெய்ப்பொருள் புலனாம். இம் மெய்ப்பொருள் சற்று வெளிப்படையாய் ஆங்காங்கும், கூடியமட்டில் வெளிப்படையாய்ச் சில சிறந்த உபநிடதங்களிலும் மறைமுகமாய்க் கூறப்பட்டிருப்பினும் அதனை முற்றிலும் வெளிப்படையாய் விளக்கி, ஆன்மாக்களை உய்விக்குமாறே 28 திவ்யாகமங்களும் கைலைத் தாழ்வரையில் வடமொழியிற் பெறப்பட்டன. ஆகவே இந்தத் திவ்யாகமங்களால் போற்றப்படும் பேரின்ப வீட்டு நிலையின் பேறே ஆகமப் பயனாகிய ஆகமாந்தமாம்.

மேற் கூறியாங்கு இவ்வாகமாந்தம் வட இந்தியாவில் "பிரத்ய பிஜ்ஞா தர்சன"மாக உற்பத்தியாகி தழைத்துப் பின்னர்த்தெற்கு நோக்கியது சமணமதம் தலையெடுத்தற்குப் பன்னூற்றுண்டுகட்கு முன்னரேயாகும். இதுமேற்கு இந்தியாவில் "வீரமாஹேஸ்வர தரிசன"மாகவும் தென்னிந்தியாவில் "சுத்த சைவ தரிசன"மாகவும் திரிபுற்றது. ஆயினும் அத் திரிபு ஆகமாந்தத்தின் இன்றியமையாக் கோட்பாடுகளுள் ஒன்றையும் பற்றவில்லை. இங்ஙனம் ஆகமாந்தம் இத் தென்னிந்தியாவில் தோன்றியது சமயகுரவர் நால்வரும தோன்றுவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரேயாதல் வேண்டும்.

திருக்கோவில் வழிபாடு என்பது முற்றிலும் ஆகமத்தைத் தழுவி நிற்கும் ஒரு புறச் சடங்கு. ஆதலால் திருக்கோவில் வழிபாடு என்றைக்குத் தென்னிந்தியாவில் நிலைபேறு பெற்றதாகக் கொள்ளுதல் தகுமோ அன்றைக்கே ஆகமாந்தமும் அவ்விடத்தே உலாவிப் பெருமை வாய்ந்தது என்பது திண்ணமாம். திருமூலநாயனார் தமது

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகமத்தைத் தழுவிய

3-ம் பக்கத் தொடர்ச்சி

நூலின்கண்ணே ஆகமங்களின் தொகை, வகை, உட்பிரிவு என்பவற்றை மிகவும் நுணுக்கமாக முறைபிறழாது எடுத்து ஓதுகின்றமை வியக்கத்தக்கதே. அவற்றைப் பின்னர்க் கூறுதும். திருமூலரைப் பற்றிப் புகழ்ந்து கூறும் எவ்வகைப் பண்டை வரலாற்றிலும் அவர் தென்னிந்தியாவிற்குக் கைலையிலிருந்து வந்தவரென்பதே பெறப்படுதலாலும், இவ் வாகமாந்தமும் ஆதியில் கைலைத் தடவரையில் தோன்றிய தென்றே துணிந்து கூறலாம்.

மேலும் திருவாசகத்தின் கண்ணே வரும் "மன்னு மாமலை மகேந்திர மதனிற் சொன்ன ஆகமந் தோற்றுவித்தருளியும்" என்றும்,

"கேவேடராகிக் கெளிறது படுத்து
மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்"

என்றும் வருவனவெல்லாம் இறைவன் உமையம்மைக்கு கைலைமலையில் உபதேசித்தான் என்பதனோடு மாறுபடாமையும் காணப்படும். மேலும்,

வெள்ளி மால்வரைக் கைலையில் வீற்றிருந் தருளித்
துள்ளுவார் புனல் வேணியாரருள் செயத் தொழுது
தெள்ளுவாய்மையின் ஆகமத் திறன் எலாந் தெரிய
உள்ளவாறு கேட்டருளினுள் உலகை யாளுடையாள்",

என்னும் சேக்கிழார் கூற்றினுலும சுருவிடத்து வாங்கி உத்தரகோசமங்கையில் ஒரு முகத்தோடு உபதேசித்த ஆகமங்களையே கைலையிலும் ஐம்முகத்தோடிருந்துதோற்ற முறைப்படி உபதேசித்தருளல் வேண்டும் என்றம்மை இரப்ப இறைவன் அங்ஙனம் செய்தான் என்பது பெறப்படும். இன்னும் இறைவன் வேதாகமங்களைப் பக்குவராகிய சனகராதி முனிவர்க்கும் பிறர்க்கும் வேண்டிய வேண்டியபோதெல்லாம் உபதேசித்தற்கு முக்கிய ஸ்தானமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்தலம் கைலையே என்பது பெறப்படும்.

இருபத்தெட்டுத் திவ்யாகமங்களின் தொகையையும் மேல்வரும் இரண்டு சுலோகங்களால் அறியலாம்.

.... ... ... ....
... ... .... ...
.... .... ... ...
... ... ... ... . 1.

... ... ... ....
.... .... ... ...
... .... ... ...
... ... ... ... . 2.

சதாசிவ மூர்த்தியானவர் ஈசானமுகம், தத்புருஷமுகம், அகோரமுகம், வாமதேவமுகம், சத்தியோசாதமுகம் என்னும் ஐந்து திருமுகங்களினுலும் திருவாய்மலர்ந்தருளிய திவ்யாகமங்கள் இருபத்தெட்டு. அவையாவன காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷமம், சகஸ்ரம், அம்புமான், சுப்ரபேதம், விஜயம், நிஸ்வாஸம், சுவாயம்புவம், ஆக்னேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், முகபிம்பம், புரோத்கீதம், வளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்பன. இவ்விருபத்தெட்டு ஆகமங்களைப்பற்றித் திருமூலர் பின்வருமாறு கூறுகின்றார்.

அஞ்சனமேனி யரிவையோர் பாகத்தன்
அஞ்சொடிருபத்து மூன்றுள வாகமம்
அஞ்சலி கூப்பியறுபத்தறுவரும்
அஞ்சாம் முகத்தில்
அரும் பொருள் கேட்டதே.

என்பதனாலறியலாம்.

இவ்வாகமங்கள் 28-ம். இறைவனுக்கு திருமேனியாயிருக்கும் முறைமை மகுடாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது, விரிவஞ்சி விடுக்கின்றோம்.

இனி அறிவுக்கருவூலங்கள் என யாம் எடுத்துக்கொண்ட 28 ஆகமங்களிலே பரம காருண்யராயும் உத்தமராயும் விளங்கும் பரமேசுவரனானவர் சிவதீக்ஷா சம்பன்னரான சத்சைவருக்கு சாலோக பதவியைக் கொடுக்கிற சரியாபாதம், சாமீப பதவியைக் கொடுக்கிற கிரியாபாதம், சாருப பதவியைக் கொடுக்கிற யோகபாதம், சாயுஜ்ய பதவியைக் கொடுக்கிற ஞானபாதம் என்னும் நான்கு பாதங்களையும் அறிவிக்கும் நிமித்தமாகவும், ஆன்மாக்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களும் சித்தித்தற்பொருட்டும், அவை வரையும் காத்தற்பொருட்டும் நோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம், ஔத்திரி என்னும் எழுவகைத் தீக்ஷைகளையும், கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உத்சவாந்தம், உதசவாதி பிராயச் சித்தாந்தம் வரையுமுள்ள சகல கிரியைகளும் வழுவின்றி நடைபெறற்பொருட்டுமே திருவாய் மலர்ந்தார் என்று கூறுவதே அமைவுடையது,

இன்னும் இவ்வாகமங்களிலே நான்கு பாதங்களையும் விளக்குமுகமாக, கடவுளின் ஐந்தொழில்களையும், ஆன்மாக்களின் கூறுகளையும், கடவுளை வழிபட்டு உய்யும் வழியினிடத்து உண்டாகும் வழுக்களையும் கூறுகின்றார். யோக பாதத்தை விளக்குங்கால் யோகத்தின் வழியையும் பேறுகளையும், சாதனங்களையும், சித்திகளையும், கூறியுள்ளார். மேலும் அகவுணர்ச்சி வழியாக அமையும் யோகப் பயிற்சியில் ஆன்மாவை நிலை நிறுத்தும் இடைநிலைகளாகிய ஆறு ஆதாரங்களையும், அவ்வாதாரங்களில் ஒளிரும் கடவுளின் கூத்துக்களையும், அவ்யோகப்பயிற்சியைக் கைப்பற்றுமிடத்து வேண்டப்படும் இன்றியமையாச் சீலாமுக்கங்களையும், தவாநுட்டானங்களையும், தறபோதத் தேய்வின் வரிசைகளையும் முற்றிலும் விளக்கிக் கூறுகின்றன. அதுமட்டுமா! ஞானத்தைப் பற்றிக் கூறிங்கால் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் உட்பிரிவுகளையும் அவைகளின் மெய்ப்பொருள்களையும்; அம்மெய்ப்பொருள்களை ஊன்றி இடைவிடாது நினையும் ஆன்மாவினது அகவுணர்ச்சி மேலீட்டினால் அவ்வான்மாவின் புந்தியிற் பொழியும் இறைவனது இன்னருட் பெருவெள்ளத்தின் தன்மைகளையும். அத்தன்மைகளைச் சார்ந்து அப்பேரின்ப வீட்டை அணுகும் அவ்வான்மாவுக்குப் புலப்படும் பற்பல காட்சிகளையும் அவ்வீட்டின் இறுதி இயக்கத்தையும்கூறுகின்றன.

—தொடரும்.

## மகோற்சவங்கள்

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் கோயில், சரவணை இந்தன் முத்து விநாயகர் கோயில் வைகாசி 3உ (16-5-60) திங்கட்கிழமை கொடியேற்றம். புங்குடுதீவு மேற்கு பிள்ளையார் கோயில் வைகாசி 2உ (18-5-60)புதன் கிழமை கொடியேற்றம்.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா

616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமா[illegible]

[illegible]

சிருப்பர்

Std 14


## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

—0—

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு வழக்கு இலக்கம் 6231

வழக்காளி.- உடுப்பிட்டி சின்னத்தம்பி வேலுப்பிள்ளை மகள் தங்கம்மா.

எதிரி:- உடுப்பிட்டி காலஞ்சென்ற கந்தையா வயிரமுத்து கைம்பெண் இலட்சுமிப்பிள்ளையின் ஆதனங்களுக்கு பிரதிகாரியஸ்தர் என்றவகையில் உடுப்பிட்டி வயிரமுத்து கந்தசாமி.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ்க்காணும் ஆதனங்கள் 1960ம் ஆ ஆனி மாசம் 18ம் தேதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று

1. உடுப்பிட்டியிறை மலையான் தோட்டம் வீடு ½. ஷெ நிலப் பரப்பு $12\frac{1}{8}$. பாலானை நிலப் பரப்பு $5\frac{3}{4}$. இப் பிரிவுகளுக்குக் கூடிய நிலப்பரப்பு 18. குளி $9\frac{3}{4}$. எல்லை கிழக்கு ஒழுங்கையும் சின்னத்தம்பி முருகுப்பிள்ளைக்குடைய வாதனமும். வடக்கு ஒழுங்கை. மேற்கு வேலுப்பிள்ளை பெண் பொன்னம்மாவுக்குடைய வாதனம். தெற்கு சின்னத்தம்பி முருகேசு பெண் இரத்தினம்மாவுககுடையவாதனமும் செல்லையா பெண் சின்னம்மாவுக்குடையவாதனமும் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள் தென்னைகள் புளியமரம் கொட்டில்கள் கிணறு அடங்கலும்.

2. ஷெ யிறை தில்லையடி வயல் நெற்பரப்பு 37. ஷெ நெற்பரப்பு 11. ஷெ வடக்குத் தில்லையடிவயல் நெற்பரப்பு $12\frac{1}{4}$. கூடிய நெற்பரப்பு $60\frac{1}{4}$ எல்லை கிழக்கு சின்னத்தம்பி கைம்பெண் சின்னத்தங்கச்சிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் வடக்கு ரோட்டு. மேற்கு சுவாமிநாதர் பெண் தெய்வானைக்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு வீரகத்தி தம்பிப்பிள்ளைக்கும் மறுபேருக்குடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளடங்கலிற் சொரியலாய் நெற்பரப்பு மூன்றும்.

3. ஷெ யிறை கொத்தி வயல் நெற்பரப்பு $13\frac{1}{2}$, எல்லை கிழக்கு கந்தர் வல்லிபுரத்திற்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்குவேலுப்பிள்ளை முருகுப்பிள்ளைக்கும் மறுபேருக்கு மூடையவாதனம், மேற்கு கதிர்காமர் சின்னத்துரைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் தெற்கு குளம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளடங்கலிற் சொரியலாய் 8/27 பங்கும்.

4. ஷெ யிறை வல்லதேவன் இலநதையடிகக்கு வடக்கு நெற்பரப்பு 20. எல்லைகிழக்கு முருகர் வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு சின்னத்தம்பி பெண் சிதேவனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். மேற்கு சின்னததம்பிபெண் சின்னாச்சிககுடைய வாதனம். தெற்கு கந்தன் பெண் வள்ளிக்கும் மறுபேருக்கு முடைய வாதனம். இவ் வெல்லைக் குட்பட்ட நிலம், பனைகள் கிணறு கொட்டில்கள் வீடுகள் அடங்கலிற் சொரியலாய் அரைவாசியும்.

| | |
|---|---|
| தீர்வைத் தொகை | 1556-00 |
| ரூபா 1110-00. 3-12-1958 தொடக்கம் 7-5-1959 பன்னிரண்டு வீத வட்டி | 55-00 |
| ரூபா 1611-00. வட்டி 5 வீதம் 8-5-1959தொடக்கம் 20-8-1960 வரை | 73-83 |
| மொத்தம் | 1684-83 |

கா, முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer.
சந்நிதிவேல்,
பருத்தித்துறை, 5-5-1960.
M. 22 13-5-60

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 6118-ம் இலக்க வழக்கில் 1960-ம் ஆ சித்திரை மீ 4-ம் உ பைசகொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1960-ம் ஆ ஆனி மீ 14-ம் உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பின்னால் காணும் ஆதன டாப்பின் ஒழுங்கின்படி என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

புலோலி கிழக்கு
வ. சிதம்பரநாதர்
கணபதிப்பிள்ளை
—வழக்காளி

எதிராக

அல்வாய் மேற்கு
1. இளையதம்பி சிவராசசிங்கம்
2, பெண் கண்மணி.
—எதிராளிகள்.

அறவிடவேண்டிய
தொகையின் விபரம்

வருமதி ரூபா 1207. 21-7-58 தொடக்கம் 15-10-58 வரைக்கும் ரூபா 1000-க்கு வட்டி ரூபா23-50 15-10-58 தொடக்கம் 15-2-60 வரைக்கும் ரூபா 1230-50 க்கு வட்டி ரூபா 87-25. கூடிய ரூபா 1317-75. கோட்டுச் செலவால் கொடுபட்ட ரூபா 125/- நீக்கி மிகுதிச் செலவும்,

ஆதனடாப்பு

1. அல்வாய் மழவராய குறிச்சியிறை. 'சிலைவல்லான் சீமா' நில பர. $5\frac{1}{2}$, எல்லை கிழக்கு கை ஒழுங்கை. வடக்கு வயிரமுத்து பெண் பூரணத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு ஆறுமுகம் பெண் செல்லம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு முருகுப்பிள்ளை கனகசபைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குள் பனைகள் வடலிகளிற் சொரியலாய் 2/3 பங்கில் பயிர் பங்கு நாலிலொன்றிலும் மிகுதி மூன்றிலொருபங்கு பனைகள் வடலிகளிலும் நிலத்திலும் சொரியலாய் 1/16 பங்கும் கிழக்குப்புறமாகவுள்ள வீடு கிந்தமாகவும்.

2, ஷெ மணி வீரவாகுதேவன் குறிச்சியிறை, 'நீர்வளைச்சேனை' நில பர. 111 3/8. தோட்டம் 5, இவைகளில் ஆட்சிப்படி ¼ பங்கில் நடுப்பெற நில. பர. $2\frac{1}{2}$. எல்லை கிழககு பொன்னையா பெண் தெய்வானைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளையின் உரிமைககாரருக்கும் மறுபேருக்குமுடையஆதனம். மேற்கு வேலுப்பிள்ளை பொன்னம்பலத்தின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடையஆதனம். தெற்கு ஒழுக்கை. இதில் சொரியலாய் ¼ பங்கும் முழுக்காணிக்குட்பட்ட கிழக்குப்புறமாக இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழி வாய்க்காலுரிததும்.

3. மேற்சொல்லிய நீர்வளைச்சேனையில் நடுப்பெறநில.பர. $2\frac{1}{2}$. எல்லை கிழககு வல்லிபுரம் கந்தசாமிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடககு சின்னத்தம்பியார் பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருககுமுடைய ஆதனம். மேற்கு கதிர்காமத்தம்பி பெண் இராசம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு ரோட்டு. இதில் சொரியலாய் அரைவாசியும் முழுக்காணிககுட்பட மேற்குப்புறமாக இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்,

4. ஷெ இலற உந்து ஒடை நில. பர 6 5/8. இதில் தெற்கரைவாசிக்கு நில. பர. 3 5/16. பனைகள் வடலிகளும், எல்லை கிழக்கும் மேற்கும் சண்முகம் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு கணபதிப்பிள்ளை பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு வேல் அந்தோனியின் உரிமைக்காரருக்குடைய ஆதனம். இது முழுவதும்.

S. C. Kanagasabai
கொம்மிசனர்
புலோலிகிழக்கு,
6-5-1960.
M. 21 13-5-60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்போன்றதல்லவா தாய் மொழி

## அதை விட்டுக்கொடுத்தலிலும் இறத்தல் மேலானது

"தனது உள்ளக் கருத்தை வெளிக் காட்டுவது மொழியாகும். அது உணர்ச்சியையும் வெளிக் காட்டுகிறது. மனிதனுக்கு மொழி உயிர் போன்றது மொழி இல்லாவிடில் வாழ்க்கை சோபிக்க முடியாது. தனது மொழியை விட்டுக் கொடுக்கக்கூடாது. மொழியை விட்டுக்கொடுப்பதை விட இறந்துவிடுவது நல்லது."

மற்றவர்களுக்குப் பயந்து வாழக்கூடாது. மொழி கருத்தையும் உணர்ச்சியையும் வெளிப்படுத்துமென்று கூறினும் தாய்மொழிபோல் உணர்ச்சியை வெளிப்படுத்த வேறு மொழிகளால் முடியாது. தமிழ்மொழி பழமையினும் பழமையானது. எண்ணத்தை உருவாக்குவதற்கு மொழி பிரதானமானது. தம உணர்ச்சியை வெளிக்காட்ட எந்த மொழி எம்மோடுஇயைந்ததோ அதுவே தாய்மொழி. சீமை சென்ற தமிழ்மகன் உணர்வற்றுத் தூங்கும்போது திடுக்காட்டம் உண்டானால் தன் தாய் மொழியிலேயே ஐயோ என்று வாய்விட்டுச் சொல்வாரேயன்றி 'ஓகோட்' (O God) என்று சொல்லவராது, அடிப்படையிலுள்ள மூதற்பயின்ற தாய்மொழியே ஏக்கமுற்ற தருணங்களில் வாயில் வரும் இந்த மொழி தினமொழி; இலக்கியமொழி அகராதித் தமிழ் அகத்தமிழ் என்னும் பாகுபாடுகள் உள்ளது. நிலம் நெல் அரிசி சோறு போன்ற நிலமை மொழியிலுமுண்டு. பல்லூழி

தொடர்ச்சி 6-ம் பக்கம்

### சமயாசாரியர் பாத யாத்திரைச் சபை

முதல் வருடாந்த அறிக்கை

மேற்படி அறிக்கை, மேற்படிசபையினர் யாழ்ப்பாணத்திலிருந்து 16-9-59-ல் புறப்பட்டுச் செய்த பாத யாத்திரையின் விபரங்கள், அவ்வித பாத யாத்திரைகளின் தேவை ஆதியவற்றை எடுத்துக் காட்டி விளக்குகின்றது.

இச்சாதனை பெரும்பயன் தருவதொன்ருகு மென்பது சொல்லாமலே யமையும்.

———

### மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை

—0—

நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டு யாழ் நகரசபைத் தலைவராயிருந்த திரு. பி. காசிப்பிள்ளை தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இப்பொழுது தலைவராயிருக்கும் திரு ஏ.ரி. துரையப்பா மீதும் நம்பிக்கையில்லையென்று தெரிவிக்கும் பிரேரணை ஒன்றுக்கு முன் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

### தருமபுரம் ஆதீனத்தில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

———

7.ம்தேதிமுதல் 17ம்தேதிவரை)

கொள்ளிடம், மே 2

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு மகோற்சவம் 7-ம் தேதி முதல் 18-ந் தேதிவரை நடைபெறப்போவதைமுன்னிட்டும், ஆதீனத்தின் முதல் குரவரான தவப்பெருந்திரு குருஞானசம்பந்தரின் குருபூசைவிழா 16-ம், 17-ம தேதிகளில் நடைபெறப் போவதை முன்னிட்டும், ஆதீனத்தின் 25-வது பட்டம் குருமகாசந்நிதானம் தவப்பெருந்திரு கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்தின் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில் 7-ந் தேதி முதல் 17-ந் தேதிவரை 11 தினங்கள் திருநெறிய தெய்வத் தமிழ் மகாநாட்டை நடத்திவைப்பார்கள்.

11 நாள்களிலும் முறையே ஒவ்வொருநாளும் "திருஞானசம்பந்தர் திருநாள்"; 'திருநாவுக்கரசர் திருநாள்' "சுந்தரர் திருநாள் 'மாணிக்கவாசகர் திருநாள்" 'மெய்கண்டார் திருநாள்' "அருணந்திதேவர் திருநாள்' 'மறைஞானசம்பந்தர் திருநாள்' 'உமாபதிதேவர் திருநாள்' 'கமலை ஞானப்பிரகாசர் திருநாள்'; 'குருஞானசம்பந்தர் திருநாள்' 'ஆனந்த பரவசர் திருநாள்' கொண்டாடப்படும்.

16ம் தேதி தவப்பெருந்திரு குரு ஞானசம்பந்தரின் குருபூசை விழாவில் 'திருக்கயிலாய யாத்திரை' என்ற நூல் நினைவுமலர் வெளியிடப்படும்; 17ம் தேதி இரவு 25 வது பட்டம் குருமகாசந்நிதானம் தவப்பெருந்திரு கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் சிவிகையில் எழுந்தருளிப் பட்டணப் பிரவேசம் செய்வார்கள்.

——

### நிறபேதக் கொள்கையை நீக்க வேண்டுகோள்

———

தென் ஆபிரிக்க நிறபேதக் கொள்கையை நீக்குதற்கு வேண்டிய செயலாற்றும்படியும், குறித்த கொள்கையாற் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவிபுரியும்படியும் கேட்டு பிரித்தானிய சம்ராச்சிய மகாநாட்டாருக்கு வேண்டுகோளொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இரு பிரித்தானிய பாப்பாண்டவர்களும் இரு பிரித்தானிய பிரபுக்களும் இரு பிரித்தானிய தொழிற் கட்சித் தலைவர்களும் குறித்த வேண்டுகோளுக்குக் கைச்சாத்திட்டுள்ளனர்,

——

## அம்மை அப்பரை எமக்குள்ளே வழிபட வேண்டும்

### சிவகுமாரர் ஒருவர் காட்டிய செந்நெறி


ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரும், சுவாமி விவேகானந்தரும் தற்காலத்தில் தோன்றியுள்ள இரு சிவகுமாரர்களாவர். அன்று அம்மையப்பனிடமிருந்த மாங்கனியைப்பெற உலகைச் சுற்றி வரும்படி கூற உலகமனைத்திற்கும் மூலம் அம்மை அப்பனே என்றுணர்ந்து அவர்களை வலம்வந்து மாங்கனியைப் பெற்ற கணபதியைப்போல தட்சிணேசுவரத்திலிருந்தே இறைவனருளுக்காளானவர் ஸ்ரீ இராமக்கிருஷ்ணர்.

தமது மயிலிலே உலகத்தை வலம்வந்த முருகவேளைப்போல, உலக முழுவதும் பரமாத்திக நெறியைப் பரப்பியவர் சுவாமி விவேகானந்தர். இந்த உத்தமர்கள் பரமாத்திக நெறியைப் பின்பற்றி நம் உள்ளத்தில்உள்ள இறைவனைத் தேடவேண்டியது நமது கடமையாகும்.

ஒரு நாட்டை அடிமைகொள்ள நாலு வழிகள் உண்டு. அவை அரசியல் வெற்றி, பொருளாதார வெற்றி, சமுதாய வெற்றி, கலாச்சாரவெற்றி என்பனவாகும். 1836-ல் மெக்காலே பிரபு தமது பிரசித்திபெற்ற கல்வித் திட்டத்தைப் புகுத்திச் சமுதாய கலாச்சார வெற்றிக்கு வழிவகுத்தபோது, கல்கத்தாவில் ஸ்ரீ இராம கிருஷ்ண தேவர் அவதரித்து நம்மவர்க்குப் புத்துயிர்ஊட்டக்கூடிய ஞானப் பெருவாழ்வை வாழ்ந்து காட்டினர்.

மனிதனகைப் பிறந்தவனெவ்வொருவனும் உண்டு, உடுத்து வாழ்வதுதான் தனது வாழ்க்கையின் இலட்சியமென்று கருதாது தன்னுள்ளே அம்மை அப்பனை வணங்கி அவனருளுக்காளாகவேண்டுமென்பதே சுவாமி விவேகானந்தரது மூதற்போதனையாகும். உலகில் உள்ள பல சமயத்தவர்களும் தம் தெய்வம் பெரிது, உமதெய்வம்பெரிது என்று வீண் வழக்காடும் எண்ணத்தை மறந்து எல்லாச் சமயத்திலும் உண்மையுண்டு என்பதை உணர்ந்து நடக்கக்கூடிய ஒரு சமரச மனப்பான்மை அவசியம், என்று மட்டக்களப்பில் நடந்த ஸ்ரீ இராம கிருஷ்ண ஜயந்தி விழாவில் பேசும்போது ஸ்ரீமத் சுவாமி சிவபுரானந்தா அவர்கள் கூறினார்கள்.

——




## மெய்யுணர்வைத் தரும்

முதற்பக்கத் தொடர்ச்சி)

கும். நவில்தொறும், நவில்தொறும் நூல்நயம் தோன்றுமாப்போல் பழகப்பழக அன்பு தோன்றும். அதே போன்று பழகப் பழக நூல் நயம் தோன்றும். திருக்குறளானது வெறும் செய்யுள் வடிவுமாத்திரம் அல்ல, அது பெரும் நூல் வடிவைக் கொண்டது - உயர்ந்த கருத்து ஆழம் நிறைந்த முப்பால்களை யுடையது. முன்னும் பின்னும் இயைந்து திட்பநுட்பமமைந்து சைவப்பாங்காக மெய்யுணர்வு தரும் நூலாக சித்தாந்தக் கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது என்பதற்கு அறிஞர்கள் சான்றுபகர்வார்கள்.

இருவினையொப்பு என்பது ஆணவம் வலிகெட உண்டாவது. அதுவே நான்காவதாகிய ஞான நிலை. நிலையாமை, துறவின் பிரிவு ஆகியவை சைவ சித்தாந்தத்தின் உள் அடங்கும். இச்சாசத்தி ஞானசத்தி, கிரியாசக்தி என்பன தம் ஆக்க வேலைகளை முறைப் படுத்திச் செய்யவல்லன. ஆகமத்துள் பதி, பசு, பாசம் என்பன அடங்கும். ஆ=பாசம், க=பசு, ம=பதி 'ஆகமம்' என்பது மக்களை ஈடேற்றும் ஞான நூல் என்றும் பொதுநூல் என்றும் சொல்லப்படும். "ஆகமமாகி நின்றண்ணிப்பான்றாள்வாழ்க" என்று திருவாதவூரடிகள் பாடியுள்ளது நோககத்தக்கது. மும்மலமென்பது ஆணவம், கர்மம், மாயை என்பன. மாயையானது தனு, கரண, புவனபோகங்களை உண்டாக்கி ஆன்மாக்களின் புண்ணிய பாவங்களுக்கு ஏற்றவாறு இருளை நீக்கும விளக்கைப்போல ஆணவ வலியை ஒருவாறு நீக்கி அறிவைக்கொடுக்கும் கருவியாகவுள்ளது. அறிவு எவ்வளவுக்கு வளருகிறதோ அதேபோல ஆணவமும் தேய்ந்து போகிறது எங்கள் உடம்பானது மும்மலங்களால் கட்டப்பட்டது. இதையே திருஞானசம்பந்தரும் "பாசத்தைப் பசுக்கள் விட்டு........" என்ற பாடல்மூலம் விளக்குகின்ருர்.

"பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் என்றெற்
ஏதம் பலவுந்தரும்" [றென்று

என்ருற்போன்று பொய் ஒழுக்கத்தில் நின்று உலாவும் துறவிகள் வருந்துவார்கள். நாமே பரம்பொருள் என நினைந்து இறுமாந்து திரிவோர் அறியாமை பகை போன்றவற்றுக்குள்ளாகுகின்ருர்கள். இருளை அகற்றுவது ஒளி. சிறு ஒளிகள் எல்லாம் சூரியனுகிய பேரொளிக்குள் அடங்குவதுபோல் ஏமாப்புடையவர்கள் எல்லோரும் அப்பரம்பொருளுக்குள் அடங்குவார்கள். கடவுளானவர் பசு, பாசம் என்ற பொருள்களுக்கு அப்பாற்பட்டவர். அவர் எண்குணங்களையுடையவர்.

"இருள் நீங்கி இன்பம்பயக்கும்
மருள் நீங்கி
மாசறு காட்சியவர்க்கு'

என்றபடி மயக்கம் நீங்கி மெய்யுணர்வுடையவர்க்கு, அம்மெய்யுணர்வானது அறியாமையைநீக்கி இன்ப நிலையைக் கொடுக்கும். (இருள்—நரகம்) சரியை, கிரியை, யோகங்களை முறைப்படி அனுட்டித்தோர் மோட்ச நிலையை அடைவார்கள். பக்குவ நிலையாகிய யோக மார்க்கத்தை யடைந்தோர் மோட்ச நிலையை அடைவார்கள்.

"பற்றுக பற்றற்ருன்
பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்ற குறளை நன்கு ஆழ்ந்து ஆராய்ந்து சிந்தித்தால் பாசத்தை விட்டுப் பதியைப் பசு அடையும் சைவசித்தாந்தத்தின் உண்மை விளங்கும்.

——

### திருக்கேதார யாத்திரை

—o—

கொள்ளிடம், மே. 1

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது பட்டம் குருமகா சந்நிதானம் தவப்பெருந்திரு. சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் நேற்று (30-4-60) விடியற்காலை ஆதீனத்திலிருந்து இமயமலையிலுள்ள திருக்கேதாரம், மற்றும் காசி, ரிஷிகேசம், ஹரித்துவாரம் முதலிய புண்ணிய ஸ்தல யாத்திரைக்கு யந்திர உந்துவண்டி (கார்) மூலம் புறப்பட்டுச் சென்றுள்ளார்கள்.

யாத்திரை ஒருமாத காலம் நடைபெற்றபின் ஆதீனம் வந்து சேருவார்கள். (சு. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம் சாமி
**தங்கபஸ்பம்**
உபயோகியுங்கள்.

தேகபுஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறுஇல்லை. உடல் பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும், உண்டாக்குகிறது. வாழ்க்கையில் இன்பத்தைத் தருகிறது. உஷ்ணம், இடுப்பு வலி, வாய்வு முதலிய வியாதிகளைக் குணமாக்குகிறது.

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 35-00.

**தாளக பஸ்பம்** ஈளை, இளைப்பு, தொய்வு, இருமல் கடின சுவாசம், கோழை, கபக்கட்டு. பீனிசம் இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் குணமாக்குகிறது.

24 நாள் புட்டி 1-க்கு விலை ரூ 12-00
ஏஜெண்டுகள் தேவை. : கேட்லாக் இனும்.

**மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S I.**

# உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 15-5-60—22-5-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

எல்லா இடைஞ்சல்களையும் நீர் இந்த வாரம் நீக்கக்கூடியதாயிருக்கும். கல்வித்துறையிற் சித்தியும் பகைவர் அழிவும் உண்டாக்கூடும். வார இறுதியில் சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

இந்த வாரம் சிறு சுகவீனங்களுண்டாகக்கூடும், வாரத்தின் முதல் நாள் கவனமாய்க்கழிக்க வேண்டும். வாரமிகுதியில் இனத்தவர்கள் நண்பர்கள்மூலம் இலாபங்கள் நிச்சயம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

உத்தியோகத்துறையில் நல்ல வாரம். நீர் போட்டியிடுவோரை வெல்லக்கூடியதாயிருக்கும், ஞாயிறு பிற்பகல் திங்கள் செவ்வாய் கவனமாய்க் கழிக்க வேண்டும். வார மிகுதி திரும்பவும் நன்ருகும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

இடைஞ்சல்களிலிருந்து நீங்க சில நண்பர்கள் உமக்கு உதவுவார்கள். செவ்வாய்இரவு புதன் வியாழம் கவனமாய்க் கழிக்க வேண்டும். வார மிகுதி திரும்பவும் நன்ருகும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

சிறிதுகாலத்துக்குத் தேகசுகம் சிக்கலாயிருக்கும். ஆனல் உத்தியோகத் துறையில் ஒரு நல்ல வாரம். பிதாவழி இனத்தவர் அதிக உதவியாயிருப்பர். வியாழம் இரவு வெள்ளி சனி கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

நீர் இந்தவாரம் சித்தியடைதற்கு முயன்றுழைக்கவேண்டும். இனத்தவர்களுடன் முரண்பாடுகளுக்கிடமுண்டு. நண்பர்களுடனும் சில பிழை எண்ணங்களுண்டாகும். செலவதிகரிக்கும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

குடும்பச் சூழலில் இந்தவாரம் சில பிழைஎண்ணங்களுண்டாகக் கூடும், தேகசுகமும் அதிகம் நல்லாயிருக்க மாட்டாது, கருமங்களில் இந்தவாரம் விரைந்து எவ்வித தீர்மானமுஞ் செய்ய வேண்டாம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணத்துறையில் நல்ல வாரம். உத்தியோக சித்தியும் நிச்சயம். ஆனல் மனச் சமாதானமிருக்க மாட்டாது. வழக்கத்திலும் வேலை கூடுதலாயிருக்கும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

மனச்சமாதானமிருக்கமாட்டாது. இரகசியப் பகைவர் மூலம் இடைஞ்சல்களுக்கிடமுண்டு. விசேட கருமங்களில் எந்தவிதமான தீர்மானமுஞ் செய்யமாட்டாது வருத்தப்படுவீர்.

**மகாராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

இந்தவாரம் வரவு செலவைச் சமாளிப்பதில் வருத்தப்படுவீர். சுகவீனங்களுக்கும் இரகசியப் பகைவர் மூலம் இடைஞ்சல்களுக்கும் இடமுண்டு. மேலதிகாரிகளுடன் சண்டைகளைத் தவிர்க்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

புதுக் கருமங்களுக்கு இந்தவாரமும் நல்லாயிருக்கும், சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர், பழைய முதலீடுகள் நல்ல பலனைத்தரும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

பணத் துறையில் நல்லவாரம். ஆனல் வேலை கூடுதலாயிருக்கும். நீர் சிறிது பிரயாணஞ் செய்ய வேண்டி வரக்கூடும். வார இறுதியிற் குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு.

## உயிர் போன்ற ... ...

5-ம் பக்கத் தொடர்ச்சி

காலம் சென்ருலும் தன் சுய எழிலுடன் மாறுபாடின்றி இருக்கும் நிலம்போல மாறுபாடில்லாத கருத்துக்களை வடித்து வைத்திருப்பவை இவையே. அகர முதலவெழுத்தெல்லாமென்ற முக்கால உண்மையே நிலம்போன்றது. இலக்கியமோ இன்பமோடு நலமும தருவது. தமிழ்மொழி இன்பமயமானது. இன்பம் என்று குறிப்பிடும்போது இருவகை இன்பங்கள் உண்டு ஒன்று சொல் இன்பம். மற்றது பொருள் இன்பம்

தமிழ் இலக்கியங்கள் பல காலங்களுக்கு உணவு தருப நிலச் சொந்தக்காரர்கள்போல் பல காலங்களுக்கும் வேண்டும். தமிழின் இன்பத்தைச் சங்க இலக்கியங்கள் தொடக்கம் காப்பியங்கள் நாடோடிப் பாடல்கள் பிச்சைக்காரன் பாடல்கள் வரையுப் காணமுடியும்.

சரவணை இலக்கிய விழாவில் 'தமிழ் இன்பம்' என்னும் பொருள்பற்றிப் பேசும்போது ஸ்ரீமத் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்கள்.

---

# சிங்களக்குடியேற்றம்பற்றி முதல் மந்திரி கூறிய கூற்று

## உண்மைக்கு மாருனதா அல்லவா?

பாராளுமன்றத்தில் சிம்மாசனப் பிரசங்க விவாதத்தின்போது பிரதமமந்திரி தெரிவித்த சிலபிழையான கூற்றுக்களை மறுக்க வேண்டியவனுக இருக்கிறேன், பெரும்பாலான நீர்ப்பாய்ச்சல் திட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில்தான் இருப்பதாக அவர் சொன்னர். அது தவறு. அவர் முன்பு பிரதமராக இருந்தபோது அப்படி இருந்தது. ஆனல் இப்போது நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. அதுவும் வடக்கு, கிழக்கு மாணங்களிலுள்ள நீர்ப்பாய்ச்சல் திட்டங்களில் பெரும்பாலானவற்றில் சிங்களவர்களைக் குடியேற்றிவிட்டார்கள்.

மினிப்பையில் 27 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரண நீர்ப்பாய்ச்சல் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. கவுதுல்ல திட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கர் நிலமும், வளவை திட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கர் நிலமும், ரஜங்கன் திட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கர் நிலமும் நீர்ப்பாய்ச்சல் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட விருக்கின்றன. இவை யாவும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேதான் இருக்கின்றன.

வளவை திட்டம் 80 ஆயிரம் ஏக்கர் நிலம். மல்வத்து ஓயாத்திட்டம் - 28 ஆயிரம் ஏக்கர் நிலம். மஹாவெலி திட்டம்-43,700 ஏக்கர் நிலம். இவை உத்தேசத்திட்டக்கள். ஆகவே பிற மாகாணங்களில் பெரிய குடியேற்றத்திட்டங்கள் இல்லாததால்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களவர் குடியேற்றப்படுகிருர்கள் என்று பிரதமர் கூறியது உண்மைக்கு மாருனதாகும்.

கல்லோயா திட்டத்தின் கீழ் 30 ஆயிரம் ஏக்கர் நிலத்தில்தான் நீர்ப்பாய்ச்சல் வசதி இருக்கிறது. ஆனல் அங்கு குடியேறியிருப்பவர்களில் 80 சத விகிதமானேர் சிங்களவர்கள்.

பண்டா - செல்வநாயகம் ஒப்பந்தத்திலுள்ள குடியேற்றக் கொள்கையின்படி ஒரு உடன்பாடு ஏற்பட்டால்தான் அற்ப சொற்ப குடியேற்றப் பகுதிகளாவது வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நிலமில்லாதவர்களுக்குக் கிடைக்கும்.

சிங்களக் குடியேற்றம்பற்றி ஸ்ரீ இடட்லி சேனுநாயக் கூறிய கூற்றுக்கு மேற்கண்டவாறு மறுப்பு வெளியிட்டுள்ளார் (கிளிநொச்சி முன்னுள் பிரதிநிதி) திரு. ஏ. சிவசுந்தரமவர்கள்.

---

# தொழில் நுட்பக்கல்லூரி

(*SCHOOL OF TECHNOLOGY*)

யந்திர கைத்தொழிற் சமாசத்தாரால் அமைக்கப்பெற்றது.

Established by
The Engineering & Industrial Company Limited.

1960 ம் ஆண்டு ஜனவரி 18 ந் திகதி தொடக்கம் 52 வாரங்களுள்ள 4 கல்வித் தவணைகளில் பின்வரும் துறைகளில் கல்வி கற்பிக்கப்படும்.

(அ) மின்சார யந்திர வேலை (இலண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் பரீட்சை). இங்கிலாந்து மின்சார யந்திர நிபுணர்கழகத்தார் நடத்தும் முதற்பகுதிப் பரீட்சைக்கு ஏற்றதாக இக் கல்லூரி வகுப்பைக் கணிக்கச் செய்தற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

(ஆ) வானெலிக் கருவி வேலை (சிற்றி அன்ட் கில்ட்ஸ் பரீட்சை)

(இ) அளத்தல் மட்டப்படுத்துதல் (அளப்புப் பகுதித் தலைவர் அதிகாரச் சீட்டு வழங்கும் பரீட்சை)

(ஈ) படம் வரைவோர் பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு, அளப்புப் பகுதித் தலைவரின் உத்தரவுபெற்ற படம் வரைவோர் அதிகாரப் பரீட்சை.

(உ) பி. எஸ். சி, (Econ.) முதல் வருடம் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பு இகொனமிக்ஸ் (பொருளாதாரம்) 3 கல்வித் தவணைகள் (இலண்டன் சர்வகலாசாலைப் பரீட்சை)

எஸ். எஸ். சி. அல்லது அதை ஒத்த வகுப்பிற் படித்த மாணவரின் விண்ணப்பங்களே ஆலோசனைக்கு அங்கீகரிக்கப்படும்.

விடுதி ஒழுங்கு இருக்கின்றது.

பத்திரங்கள், விளக்கப் புத்தகங்கள் பிறவிபரங்கள் என்னிடமிருந்து பெறலாம்.

த. சிற்றடல் — விக்ரர் ஜே. இராசையா
சுண்டிக்குளி யாழ்ப்பாணம். — தலைமை ஆசிரியர்.

# ஆதிசிதம்பரத்தில் அடியார் திருவுருவப் பிரதிட்டை

கொள்ளிடம் ஏப் 11 "சிவஞான போதம்" என்ற சைவ சமயத்தின் ஞானக் கருவூலத்தை அருளிச் செய்துள்ள ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவவதார ஸ்தலமாகிய பாதாள கயிலாயம் என்றும் ஆதிசிதம்பரம் என்றும் திருப்பெயர்களைக் கொண்டுள்ள திருவெண்காடு ஸ்ரீ பிர்மவித்யாம்பாள் சமேத ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரர் தேவஸ்தானத்தில் நேற்று சென்னை அரசாங்க அறநிலைய ஆணையாளர் திரு. ஏ. உத்தண்டராமபிள்ளை ஐ. ஈ. எஸ். அவர்கள் முன்னிலையில் தேவஸ்தான தருமபரிபாலகர்களான திரு. சின்னத்துரை, திரு. கே. கனகசபைபிள்ளை, திரு. சுப்பிரமணியபிள்ளை, நிர்வாக அதிகாரி திரு. என். கோவிந்தசாமிபிள்ளை ஆகிய மூவர்களும் பெரும் முயற்சிகொண்டு தேவஸ்தான நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் புதுக்கப்பட்டுள்ள அறுபத்துமூவர் தனியடியார்கள் (63 தொகையடியார்கள் 9 ஆக 72 அடியார்களின் திருவுருவங்கள் உற்சவங்கள்) செய்து பிரதிஷ்டைசெய்து மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

மேலும் 6 ஆயிரம் செலவில் ஸ்தல தேவாரப் பதிகங்களையும், சிவஞானபோதப்பாடல்களையும் சலவைக்கற்களில் பொறித்து ஸ்ரீ சுவேதாரஸ்யேஸ்வரர் சன்னிதிக்குள் பிரதிஷ்டை செய்துள்ளதை ஆணையாளர் திரு. ஏ. உத்தண்டராமபிள்ளை ஐ. ஈ எஸ். அவர்கள் திறந்து வைத்தார்.

88 வயதுள்ள சித்தாந்த பேராசிரியர் திரு. சபா. சிவப்பிரகாசம்பிள்ளை எழுதிய சிவஞானபோதம் சிற்றுரை விளக்கம் ஒன்றும் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மாலை 5 மணிக்கு அறுபத்துமூவர் உற்சவங்கள் (72 அடியார்கள் திருவுருவங்கள்) புதிதாகச் செய்யப்பட்ட 18 விமானங்களில் ஆணையாளர் திரு. ஏ. உத்தண்டராமபிள்ளை ஐ. ஈ. எஸ். அவர்கள் தலைமையில் வீதியுலாக்காட்சி நடைபெற்றது.

தஞ்சை மாவட்டத்தில் திருவெண்காட்டில் அறுபத்துமூவர் வீதியுலா நடைபெற்றது மூன்ருவதுமுறையாகும். இதற்கு முன் தஞ்சை மாவட்டத்தில், திருவிடைமருதூர், திருவாரூர் ஆகிய இரு ஸ்தலங்களில்தான் அறுபத்துமூவர் வீதியுலா நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(தினமணி நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியனவர்கள் உதவியது.)

(வளரும்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 13-5-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org